# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆனி 5
றஜபு பிறை 1
ஞாயிறு (19-6-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 6
தொலைபேசி: 23411
விலை சதம் 60


# 'சிங்கள நாட்டை ஆள்வது யார் என்ற பிரச்சினையில் விடுதலைக் கூட்டணி தலையிடாது

## எந்தச் சிங்களக்கட்சி ஆட்சியமைக்கவும் நாம் கைகொடுக்கப்போவதில்லை.

### கொழும்பு கருத்தரங்கில் கதிரவேற்பிள்ளை அறிவிப்பு!


"சிங்கள நாட்டு அரசியலில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்காலத்தில் ஒருபோதுமே தலையிடாது; நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் சிங்கள நாட்டில் எந்த ஒரு சிங்களக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைபெறமுடியாத நிலை ஏற்படுமிடத்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் அரசு அமைக்கலாம் என்று எந்த ஒரு சிங்களக் கட்சியும் தப்புக்கணக்கு போடத் தேவையில்லை — அந்தக் காலம் மலையேறிவிட்டது. எந்த ஒரு சிங்களக் கட்சிக்கும் நாம் அரசு அமைக்க ஆதரவு தரப்போவதில்லை; சிங்கள நாட்டை யார் ஆளுவது என்பது சிங்கள மக்கள் தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்சினை. அதேபோல, தமிழ்ஈழத்தை யார் ஆளவேண்டுமென்பது தமிழ் பேசும் மக்களே தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்சினை; சிங்கள நாட்டின் தலைவிதியை நிர்ணயித்திட எப்படி எங்களுக்கு உரிமை கிடையாதோ, அதேபோல தமிழ்ஈழத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை சிங்களவர்களுக்குக் கிடையாது! இதுவே எமது நிலையாகும்!"



-மேற்கண்டவாறு 15-6-77 புதன்கிழமை மாலை மருதானை டீன்ஸ்வீதியிலுள்ள சமூக சேவை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவராகிய சிந்தனை சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

—5ம் பக்கம் பார்க்க

# அண்ணா யுகத்தில் மூன்றாவது முதலமைச்சராகிறார் எம்.ஜி.ஆர்!



## கலைஞர் கருணாநிதியே எதிர்க்கட்சித் தலைவர்!

இலங்கையின் மலையகத்தில்—கண்டியில் பிறந்தவரும், அனைத்திந்திய அண்ணா திமுக பொதுச் செயலாளரும், அறிஞர் அண்ணாவின் தம்பியர்களில் ஒருவருமான திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தமிழ் நாட்டின்முதலமைச்சராகப் பதவியேற்கிறார். அதே நேரத்தில் அண்ணாவின் தம்பியாகிய திமுக தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவராகிறார்.

தமிழ் நாட்டுஅரசியல் அறிஞர் அண்ணாவையே சுற்றிவருவதையும்,வட இந்தியகட்சிகளுக்கு தமிழ் நாட்டில் அறவே இடமில்லையென்பதையும் தமிழகத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ் நாட்டில் 1967ல் 'அண்ணா யுகம் 'ஏற்பட்ட பின்னர் — தமிழகத்தின் மூன்றாவது முதலமைச்சராகப் பதவியேற்கும் வாய்ப்பு இப்போது எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் எம். ஜி. ஆர். அவர்களின் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. 130 இடங்களையும், திராவிட முன்னேற்றக் கழகம் 48 இடங்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் 27 இடங்களையும், ஜனதாகட்சி 11 இடங்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி 1[illegible] இடங்களையும், இந்திய கம்யூனிஸ்ட்கட்சி 5 இடங்களையும

—5-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஏகாதிபத்திய காலனி ஆட்சியின்கீழ்

# தமிழ்ஈழத் தேசிய இனம் இழந்த உரிமைகள்!

## குடியுரிமை, நில உரிமை, மொழியுரிமை, பண்பாட்டுரிமை

## கல்வியுரிமை, தொழிலுரிமை பறிக்கப்பட்ட வரலாறு!

## தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பகுதி (2)

1948ம் ஆண்டு சிங்கள மக்களின் கைக்கு அரசியல் அதிகாரம் மாற்றப்பட்ட ஆறு மாதங்களுக்கிடையில் இந்நாட்டுக் குடியுரிமைச் சட்டங்கள் ஆக்கப்பட்டன. அவற்றின் விளைவாக நாட்டின் செல்வச் செழிப்புக்கு மூல காரணமாக மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள், நாடற்றவர் ஆக்கப்பட்டனர். அவர்களின் வாக்குப்பலத்தினால் 1947ம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட எட்டுத் தமிழ் பிரதிநிதிகளில் ஒருவர் தானும் 1952ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட இயலாது போயிற்று. அவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வகுக்கப்பட்ட தேர்தற்தொகுதிகள் சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பெருக்கின.

### 1. குடியுரிமைச் சட்டங்கள்

நாட்டின் சனத்தொகையில் ஏறத்தாழ 70 வீதமான சிங்கள மக்கள் நாடாளுமன்றத்தில் 80 வீதமான இடங்களைக் கைப்பற்றினர். சிறுபான்மையோருக்கு பாதுகாப்பென்ற நிலை தலைகீழாகப் புரட்டப்பட்டுப் பெரும்பான்மையோருக்கு அவர்கள் எண்ணிக்கைக்கு மேற்பட்ட பிரதிநிதித்துவம் என்ற நிலை ஏற்பட்டது. குடியரசு அரசியல் அமைப்பிலும் இதே நிலை தொடர்ந்து இருப்பதை காண்கிறோம். சிறுபான்மையோரின் அரசியல் உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பறித்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கு வழிவகுத்தது இந்த முதல் நடவடிக்கையேயாகும்.

இலங்கைத் தமிழ்மக்களும் முஸ்லீம் மக்களும் இக்குடியுரிமைச் சட்டத்தினால் சந்தேகப் பிரஜைகளாக்கப்பட்டனர். அதனால் தம் அன்றாட வாழ்வில் பல இடர்ப்பாடுகளுக்கு ஆளாக நேரிட்டது. இவற்றை ஆராய்ந்து அவர்களுக்கு விமோசனம் வழங்க அரசாங்கமே ஓர் உத்தியோகத்தர் குழுவை 1964ம் ஆண்டு நியமித்தது. அக்குழுவின் சிபார்சுகள் இன்னும் 13 ஆண்டுகளின் பின்னும் நடைமுறைப்படுத்தப்படாதிருக்கின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தம் சொந்தப் பணத்தைக் கொடுத்து வாங்கிய நிலத்தின் பத்திரத்தைப் பதிவதற்கு 100 வீத வரி கட்டவேண்டிய நிலையில் எத்தனையோ தமிழர்களும் முஸ்லீம்களும் இன்னலுற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1948ம் ஆண்டின்முன் இரண்டு தலைமுறை இங்கு பிறந்ததை நிரூபிக்கமுடியாத தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் தம் தொழில், பிரயாணம், வர்த்தகம், வேலைவாய்ப்பு முதலிய பல துறைகளில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். தமிழ் தேசிய இனத்திற்குச் சுதந்திரம் வழங்கிய முதற் பரிசு நாடற்றவன் வாக்குரிமையற்றவன் கள்ளத்தோணி என்ற நிலையும் சந்தேகப் பிரஜை என்ற நிலையுமாகும்.

### 2. குடியேற்றம்

சிங்கள அரசாங்கங்கள் தமிழ் ஈழத்தில் மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் தாக்கம் மிகவும் பாரதூரமானதாகும். தமிழ் தேசிய இனத்தின் தாயகமாகத் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு அவர்களிடமிருந்து அந்நிய ஏகாதிபத்தியத்தினால் யுத்தமுனையில் கைப்பற்றப்பட்ட பூமியில் பத்தாயிரக்கணக்கில் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களினாலும் அடுத்த ஆட்சிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. பட்டிப்பளை ஆறு, அல்லை, கந்தளாய், பதவியா குளம் ஆகிய இடங்களில் கிழக்கு மாகாணத்தில் நீண்ட நிலப்பரப்பு முழுவதிலும் சிங்கள மக்கள் அரசாங்கச் செலவில் குடியேற்றப்பட்டார்கள். இரகசிய அரசாங்க ஆதரவோடு சட்ட விரோதமாக அரசாங்க நிலங்களில் குடியேறிய சிங்கள மக்களுக்கு அவை நிந்தமாக்கப்பட்டது. இன்று காணி உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் அரசுடமை ஆக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிக்கு தென்னந்தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு பங்கீடு செய்து விநியோகிக்கப்படுகின்றன. கொண்டைவெட்டுவான், அக்கிலாவெளி போன்ற இடங்களில் தமிழ், முஸ்லிம் விவசாயிகளின் சொந்தப் பூமிகளும் அவர்கள் திருத்திச் சாகுபடி செய்த பூமிகளும் அரசாங்க உதவியோடு பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டுச் சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதேபோன்ற நிலை புத்தளத்திலும் சிங்களக் குடியேற்றத்தினால் ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ்ஈழ மண்ணைச் சூறையாடும் சிங்கள ஆக்கிரமிப்பாளருக்கு இத்தனை வசதிகளையும் அளிக்கும் அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் தரிசு நிலமாகக் கிடந்த புனானைப் பகுதியில் வாழ வழிதேடி 'காடு வெட்டிக் கழனியாக்க முற்பட்ட மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களை விசேட அவசரகாலச் சட்டங்களின் துணை கொண்டு அந்நிலங்களிலிருந்து பட்டாளத்தை விட்டுத் துப்பாக்கி முனையில் துரத்தி அடித்தது. மன்னார் மாவட்டத்தில் முந்திரிகைச் செய்கையென்று கொண்டைச்சியில் ஆரம்பித்தது' இன்று இரண்டாயிரம் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் திட்டமாக மாறிவிட்டது. யாழ்ப்பாணத்திலே கொழும்புத்துறையிலும் பரசேகரபுர போன்ற சிங்களக் குடியேற்றங்கள் உருவாகிவிட்டன.

ஆங்கிலஆட்சி அகன்ற 1948ம் ஆண்டில் 10,000 சிங்கள மக்கள்தானும் வாழ்ந்திராத கிழக்கு மாகாணத்தில் இன்று 180,000 வரையில் சிங்கள சனத்தொகை பெருகிவிட்டதை காணுகிறோம். அவர்களுக்கென்று அம்பாறை சேருவில என்ற, ஏறத்தாழ 1500 சதுர மைல் நிலப்பரப்பை உள்ளடக்கிய இரு சிங்களத் தொகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் நிலப்பரப்பில் 2/5 பங்கைச் சிங்களத் தொகுதிக்குள் அடங்கியது மாத்திரமன்றி வளமுள்ள, வருங்காலத்தில் விருத்தி செய்யப்படக்கூடிய காணிகள் அப்பகுதிக்குள்ளேயே இருக்கின்றன. தமிழ் ஈழமெங்கும் தம் சொந்தத் தாயகத்திலேயே தமிழ் தேசிய இனம் சிறுபான்மை ஆக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் ஆபத்தை எதிர்நோக்கி நிற்கின்றது. தன்னை அழிவிலிருந்து காத்துக் கொள்வதற்கு ஆக்கிரமிக்கப்பட்ட தன் பூமியை விடுவிக்க வேண்டிய நிலை வந்திருப்பதை இன்று உணருகின்றது.

### 3. மொழி

இலங்கை சுதந்திரம் பெறுமுன் 1944ம் ஆண்டில் சிங்களமும் தமிழும் இந்நாட்டு ஆட்சி மொழிகளாக இருக்குமென்று அரசாங்க சபையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று எல்லாச் சிங்கள அரசியற் கட்சிகளும் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்தன. ஆனால் 1956ம் ஆண்டு பிரதமர் பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது. ஐக்கியதேசியக் கட்சியும் அதை ஆதரித்தது. இன்று சிங்கள மக்கள் மத்தியில் இயங்கும் அரசியல் கட்சிகள் அத்தனையும் தனிச்சிங்களமே ஆட்சி மொழி என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. 1956ல் சாதாரண சட்டமாக இருந்த தனிச்சிங்களச் சட்டம் குடியரசு அரசியல் அமைப்பில் அரசியல் சட்டத்தின் அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டுவிட்டது. தமிழ்மொழி உபயோகத்திற்காக பலபோராட்டங்களின் பலனாகத் தமிழ் மக்கள் வென்றெடுத்த தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டவிதிகள் அரசியல் சட்டத்தின் அங்கமாகக் கணிக்கப்படமாட்டா என்று குடியரசு அரசியல் சட்ட விதி (2) ஆல் வேண்டுமென்றே ஒதுக்கித் தாழ்த்தப்பட்டன. இதனால் தமிழ் பேசும் மக்கள் தொழில் பதவி உயர்வு சேவை நீடிப்பு வேதன உயர்வு ஆகியவற்றில் சிங்கள ஊழியரோடு சமசந்தர்ப்பத்தை இழந்து தவிக்கும் நிலை உருவாகிவிட்டது. உண்மையில் சிங்களம் மாத்திரம் சட்டத்தின் நோக்கம் அரசாங்க சேவையில் சிங்களவர் மாத்திரம் இடம் பெறும் நிலையை உருவாக்கி தமிழ் ஊழியரை விரட்டி அடிப்பதே. இந்நோக்கத்தில் ஆட்சியாளர் பெருமளவில் வெற்றிபெற்றுவருகிறார்கள். இது சிலர் நினைப்பதுபோல வெறும் உணர்ச்சிப் பிரச்சினை அல்ல. தேசியமயத் திட்டத்தில் வேகமாக முன்னேறிவரும் நாட்டில் தமிழ்த்தேசிய இனத்தில் பொருளாதார வாழ்வையே பாதிக்கும் ஓர் உயிர்ப் பிரச்சினை இதுவாகும்.

### 4. மதம்

மதம் மக்களை மயக்க முதலாளி வர்க்கம் உபயோகிக்கும் அபின் என்பது மார்க்சிய வாதிகளின் கருத்து. ஆனால் மார்க்சிய வாதிகளும் சேர்ந்து ஆக்கிய இலங்கைக் குடியரசு அமைப்பில் பௌத்த மதம் முதலிடம் அளிக்கப்பட்டு அரசாங்கத்தினால் பேணிக் காக்கப்பட வேண்டிய ஒரே மதமாக்கப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றது. ஏனைய மதத்தவர்கள் தம் மதங்களை அனுஷ்டிப்பதைத் தவிர வேறு பாதுகாப்புக்களுக்கு அம்மதங்களுக்கு இந்நாட்டில் உரிமையில்லை. தமிழ் தேசிய இனத்தவர் இந்து, கிறீஸ்தவ இஸ்லாமிய மதங்களையே அனுஷ்டிப்பவர்கள். இதனால் அவர்கள் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரசைகள் என்று முத்திரையிடப் பட்டவராகின்றனர்.

### 5 பண்பாடு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்நாட்டில் வாழ்ந்து வந்தாலும் தமிழ் மக்கள் தம் மொழியை அடிப்படையாகக்கொண்ட தனிப் பண்பாட்டைப்பேணிக் காத்து வந்தனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்த, ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சிகளிலும் இத்தனிப்பண்பாடும் பாரம்பரியமும் பாதுகாக்கப்பட்டன. இதற்குமூலகாரணமாக இருந்தது ஈழத்தமிழ் மக்கள் எண்ணிக்கையிற் குறைந்தோராக இருந்தபோதிலும் தமிழகத்தின் வலிமை மிக்க கலாச்சார ஊற்றோடு அவர்கள் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொள்ளும் வாய்ப்பை என்றும் இழக்கவில்லை. ஈழத்தில் தோன்றிய ஆறுமுக நாவலர் விபுலானந்த அடிகள் வண. சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற பலர் உலகத் தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கு முக்கிய பணி புரிந்தவராயினும் தமிழ்க் கலை, இலக்கியத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டால் ஈழத் தமிழ் கலாச்சாரம் பெலவீனமுற்றுச் சிங்களம் தழுவியதாக மாறும் என்பது உறுதி. சமீப காலத்தில் இந்நாட்டு அரசாங்கம் தமிழகத்துக் கலைப்படைப்புக்கள், இலக்கியங்கள், நல்ல திரைப்படங்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கு பல கட்டுப்பாடுகளை விதித்தது, மாத்திரமின்றி தமிழ் அறிஞர்கள் கலைஞர்கள் வருகைக்கும் தடைகள் இட்டு வருகின்றது. அரசாங்கத்தின் சிங்கள மொழித்திணிப்புக்கொள்கையால் போயா, பொலலக்சல, சலுசல போன்ற பல சிங்கள சொற்கள் ஈழத் தமிழ்மொழியில் ஏறுகின்றன. ஒரு புறத்தில் தமிழகத் தொடர்பு துண்டிக்கப்பட மறுபுறம் சிங்களத் திணிப்பு அதிகரிக்க இந்நாட்டில் தமிழ்மொழி வேறாகத் திரிந்து தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மை அழிந்து இறுதியில் தமிழ் தேசிய இனமே இந்நாட்டிலிருந்து மறையும் நிலையை ஏற்படுத்துவதே ஆட்சியாளரின் நோக்கமாகும்.

### 6. கல்வி

அந்நிய ஏகாதிபத்தியங்களின் ஆட்சியில் கிறிஸ்தவ மத நிறுவனங்களின் உதவியினாலும் அதன்பின் தமிழ் மக்கள் தாமாக நிறுவிய சிறந்த கல்வி நிலையங்களினாலும் இந்நாட்டில் தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னணியில் நின்றனர். சிங்கள மாணவர்களும் கொழும்பு, கண்டி, காலி போன்ற மாவட்டங்களில் அதே வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர். வசதி குறைந்து பின்தங்கியிருந்த பகுதிகளைச் சேர்ந்த சிங்கள, தமிழ் முஸ்லிம் மாணவர்கள் அதே வசதிகளைப் பெற்று முன்னணிக்கு வரவேண்டியது அவசியமே, அதைச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் ஆரம்ப கல்வியைப் பெறுவதற்குக்கூட வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மாணவர்களுக்கு பல தடைகள் போடப்படுகின்றன. பல தமிழ் ஆரம்ப பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளுக்கு இடம் அளிப்பதற்காக மூடப்படுகின்றன. சில சிங்களப் பாடசாலைகள் பிரிவுகளாக்கப்பட்டு பின் அழிக்கப்படுகின்றன. சில போதிய தமிழாசிரியர்கள் நியமிக்கப்

— 6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு சிங்களப் பிரதமர்களை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஆற்றல் வீரர்!

## வயதில்-இளையவர் செயலில் பெரியவர்-இளைஞர் தலைவர் யோகேஸ்வரன்!

### யாழ்தொகுதியில் வெற்றிக்கனி அவர் கையில்!

''நான் தமிழர் விடுதலைக் கூட்டணியால் யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளனாக நியமிக்கப்பட்டுள்ளேன். தமிழர்க்கு தனிநாடு காணவேண்டுமென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதை அடிப்படைக் 'காரணமாகக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் பங்கு பற்றுகிறது. விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக அமைந்துவிட்ட இந்தேர்தலில் என்னைத் தெரிவுசெய்வதன் மூலம் யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் தமிழீழப் போராட்டத்தில் தங்கள் பங்கைச் சரிவர



ஆற்றுவார்களெனத் திடமாக நம்புகிறேன்,''

இவ்வாறு விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுள் வயதில் இளையவரும் செயல் வீரருமான சட்டத்தரணி யோகேஸ்வரன் சுதந்திரனுக்கு அளித்த விசேட செவ்வியல் கூறினார்.

### அரசியல் பிரவேசம்

'பரியோவான் கல்லூரியில் பள்ளி மாணவனாகத் துள்ளித்திரிந்த மாணவன் யோகேஸ்வரன் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தீவிர ஆதரவாளராக தனது அரசியல் வாழ்வைத் தொடங்கினார்.

(தலைவர் ஜீ. ஜீ. யை ஆதரித்து நிகழ்ந்த மாபெரும் சைக்கிள் ஊர்வலத்தில் அவ்வேளையில் தானும் பங்கு பற்றியதை பெருமையுடன் இவ்விடத்தில் நினைவு கூர்ந்தார்.)

1956ல் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கண்டு வெகுண்டு சிறுத்தையெனச் சீறிய இளைஞன் யோகேஸ்வரன் தந்தை செல்வாவின் விடுதலைப் பாசறையில் தன்னை இணைத்து கொண்டார். அன்றுமுதல் இன்றுவரை தமிழீழ விடுதலை வரலாற்றில் தனக்கென ஒரு தனியான இடத்தை இவர் தனது சாதனைகளால் உருவாக்கி வைத்துள்ளார்.

### இரு பிரதமர்களை எதிர்த்தவர்

இலண்டன் லிங்கன்ஸ் சட்டக் கல்லூரியில் பாரிஸ்டர் மாணவனாகச் சேர்ந்து கொண்ட யோகேஸ்வரனின் நினைவிலே ஈழத்தமிழர் அனுபவிக்கும் துன்பங்கள் அலைமோதின. கடல் கடந்த இலங்கைத் தமிழர் இயக்க காரியதரிசியாகவும் தலைவராகவும் ஏழு வருடங்கள் கடமையாற்றிய இவர் அவ்வேளையிலே ஈழத்தமிழினத்தின் சுதந்திரத் தீபமாய் தேம்ஸ் நதிக்கரையினிலே ஒளிவீசினார்.

சிங்களச் சட்டத்தைத் திணித்துவிட்டு மறைந்த பிரதமர் பண்டாரநாயக்கா இலண்டன் சென்றபொழுது இவரது இயக்கத்தினர் மாபெரும் ஆர்ப்பார்ட்டம் ஒன்றை இவர் தலைமையில் நடாத்தினார்கள். மீளவும் 1961ம் ஆண்டில் தமிழரசுத் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைத்துவிட்டு ஸ்ரீமாவோ அம்மையார் இலண்டன் சென்றபோது அவரை எதிர்த்து இலண்டனில் பிரபல்யம் மிகுந்த இல. 10 டவுணிங் தெருவில் ஊர்வலம் நடத்திப் பிரிட்டிஷ் பிரதமரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தார். அதில் தமிழ்த் தலைவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டுமென வற்புறுத்தி இருந்தார்கள்.

இவ்விதமாக இலங்கைத் தமிழர்க்காய் இலங்கையின் இரு பிரதமர்களை எதிர்த்த பெருமை இவரையே சாரும். இவர்களது இயக்கத்தினர் இலண்டனில் உள்ள தூதுவராலயத்தில் நிகழ்ந்த சகல சுதந்திரதினக் கொண்டாட்டங்களையும் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்வது வழமை. மேலும் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களை — குடியேற்ற ஆதிக்க நாடுகளின் சுதந்திர சபையின் தலைவர் பிரபு புரேக்வேயின் ஆதரவுடன் அடிக்கடி சந்தித்து இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை விளக்கிவந்தனர்.

### இலண்டன் அரசியலில்

பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளில் பிரபல்யமான தொழிற்கட்சியின் உறுப்பினராக இவர் திகழ்ந்தார். ஆபிரிக்க விடுதலைக்காக பாடுபட்ட சர்வதேச இயக்கத்தின்காரியக்கமிட்டி உறுப்பினராகவும் இவர் கடமையாற்றினார். வடக்கு-தெற்கு கீன்ஸ்டன் சபையின் காரியதரிசியாகவும் இயங்கினார். இவ்வாருக பிரிட்டிஷ் அரசியலிலும் அகில உலக அரசியல் அரங்கிலும் பெயர் பெற்றவர் இவர்.

### விடுதலை வீரன்

இலங்கை திரும்பியபின் 1969ம் ஆண்டுமுதல் தமிழரசுக்கட்சியின் அங்கத்தவராகவும் 1972ல் இருந்து தமிழர் கூட்டணி நடவடிக்கை குழுவின் உறுப்பினராகவும் இருந்துவருகிறார். காசிஆனந்தன் கைதுசெய்யப்பட்ட வேளையில் தமிழ் இளைஞர் பேரவையின் தற்காலிக தலைமையைத் துணிந்து ஏற்றார். இவரும் இவரது நண்பர் விஸ்வநாதனும் தமிழ் இளைஞர் பேரவையின் சட்ட ஆலோசகராகத் திகழ்கின்றார்கள்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அடுத்து இவரும் காசிஆனந்தனும் இளைஞர்கள் அலுவல்கள் இணைப்புக் காரியதரிசியாகவும் திகழ்கின்றார்கள். மேலும் யாழ்ப்பாணக் குடிமக்கள் குழுவின் காரியதரிசியாகவும் இவர் பதவிவகிக்கின்றார். இக்குழுவே தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய பகிரங்க [illegible] நடத்தியது.




1961-ம் ஆண்டு தமிழரசுக்கட்சி நடத்திய சத்தியாக்கிரக போராட்டத்தைத் தொடர்ந்து தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். தலைவர்களை தடுப்புக்காவலில் தள்ளிவிட்டு லண்டனுக்கு சென்றிருந்த பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் வருகையை பகிஷ்கரித்து லண்டனில் அப்போது படித்துக் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தை லண்டனில் அன்று முன்னின்று நடத்தியவர்தான் இன்றைய யாழ். தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன். படத்தில் ஸ்கூட்டருக்குப் பக்கத்தில் 'ஓவர் கோட்' இல்லாமல் காணப்படுபவரே திரு. யோகேஸ்வரன்.

மேலும், பொலிசாரால், எந்நேரத்திலும் கைது செய்யக்கூடிய சூழ்நிலையிலும் பொலிசாரினால் தேடப்பட்டு — பிடிபட்டு அல்லலுற்ற இயக்க இளைஞர்களுக்கு பெரும் ஆதரவு அளித்தார். இவரது கைகளே விடுதலைத் தீயை அணையாது காத்ததுஎன்றால் கூட மிகையாகாது.

### பத்திரிகை மூலம் பிரச்சாரம்

மன்செஸ்டர் கார்டியன், லிவர்பூல் டைம்ஸ், லண்டன் ஒப்சேவர் போன்ற பிரபல்யமான அகில உலகப் பத்திரிகையாளர்களை இங்கு வரவழைத்து எமது தனி நாட்டுக் கோரிக்கையின் நீதியை உலகறிய வைத்த வரும் இவரே. அத்துடன் மன்னிப்பு சபையினரை இங்கு தருவித்து எங்கள் இளைஞர்கள் சித்திரவதைப் படுத்தப்படுவதை ஐ. நா. போன்ற உலக சபைகளுக்கு தெரியப்படுத்தியவரும் இவரே.

இவ்வாருக தனது சாதனைகளால் தமிழ்மக்கள் வேதனை துடைக்கும் தன்னலமற்ற தலைவனை யாழ்ப்பாணத் தொகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக நியமித்துள்ளது. இத்தகையோரை ஆதரித்து சுதந்திரதீபம் ஒன்றை தேசிய பேரவையில் ஏற்றி வைக்க வேண்டியது யாழ்ப்பாணத் தொகுதி மக்களின் கடமை மட்டுமல்ல நன்றிக் கடனும் கூட.

—கரன்

# இராணுவப் பயிற்சிபெற்றவர் பொத்துவில் கனகரத்தினம்!

## சுபாஸ் சந்திரபோசுடன் நெருங்கிப் பழகியவர்!

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கனகரத்தினம் அவர்கள் தனது தொடக்கக் கல்வியை மட்டக்களப்பு தூயமைக்கல் கல்லூரியில் தொடங்கினார். பின்பு தனது கல்வியை சென்னையிலுள்ள கிண்டி பொறியியலில் தொடர்ந்து கொண்டிருக்கையில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியபோது பங்களூரில் இராணுவப்பயிற்சிக் கல்லூரியில் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இராணுவப் பயிற்சி பெற்று, இராணுவத்தில் பணிபுரிய சிங்கப்பூர் அனுப்பப்பட்டார். இக்காலப்பிரிவில் பிரிட்டிஸ் இராணுவத்தினர் பணிபுரிந்த போதிலும் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் படை இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். சுபாஸ் சந்திரபோஸ் உட்பட பல இந்திய விடுதலைத் தலைவர்களைக் கண்டு பழ [illegible] தார். இவர் மலேசியா பர்மா, சிங்கப்பூர், யாவா முதலிய இடங்களிலும் நல்ல பணிபுரிந்துள்ளார்.

1945 இல் இந்தியா திரும்பிய பின் பம்பாயில் கொல்பார் என்னும் இராணுவ சார்புடைய தொழிற்சாலையில் பணிபுரிந்தபின் இலங்கை திரும்பினார்.

அவ்வாண்டு தொடங்கி தாளாண்மை நீக்கும் வேளாண்மையில் தன்னை



முழுமையாக ஈடுபடுத்தி கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பிரதேசமாக விளங்கும் பொத்துவிலின் காவலனாய் விளங்குகிறார். அங்கு வதியும் தமிழர்களையும் முஸ்லீம்களையும் ஒருங்கிணைக்கும் பாலமாகவும் இவர் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு அவற்றின் விபரங்கள் அனைத்தையும் அறிந்தவராய் விளங்குகின்றார்.

கதிர்காம யாத்திரிகர்களுக்கு ஆண்டு தோறும் அன்னதானம் வழங்குவது உட்பட கிழக்கு மாகாண நிகழ்ச்சிகள் அனைத்திலும் இவர் மிக்க ஈடுபாடுடையவராய் விளங்குகிறார். கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள் எதுவும் இவரின் துணையின்றி நடைபெறு

—8ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சுய - இச்சைகள்!

கொள்கை அடிப்படையில் நடைபெறுகின்ற ஒரு பொதுத்தேர்தலில் 'சுய—இச்சை' என்ற லேபலில் வருபவர்களுக்கு துளியும் இடமில்லை! சுயஇச்சைகள், எந்த ஒரு இயக்கத்துக்கோ, கட்சிக்கோ கட்டுப்பட்டவர்கள் அல்லர்; அவர்கள் கடிவாளம் பூட்டப்படாத கட்டாக் காலி மாடுகள்! சுய இச்சைகள் மீது மக்களுக்கும் எந்த விதமான 'பிடி'யும் கிடையாது; அவர்களது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தமது சுய இச்சைகளை நிறைவேற்றும் நோக்குடன்தான் அமையுமே தவிர — மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாக ஒருபோதுமே அமையாது. ஆன காரணத்தினுல்தான், ஜனநாயகம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் 'சுய இச்சைகள்' தலையெடுப்பது தவிர்க்கப்பட்டு வருகிறது.

தமிழ்ஈழத்தில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவோரில் பெரும்பான்மையோர் சுயேச்சைகளாக போட்டியிடுகிறுர்கள். ஏறத்தாழ 45 பேர் சுய இச்சைகளாகவே தேர்தலில் குதித்திருக்கிறுர்கள்!

இப்படி போட்டியிடும் சுயேச்சைகளிலும் மிகப் பெரும்பாலோர் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் 'டிக்கெட்' கேட்டு, அது கிடைக்காதவர்களே! கூட்டணி 'டிக்கெட்' கிடைக்காத சிலர் திடீர் 'காளான்' கட்சிகளை ஆரம்பித்து, அவற்றின் நிழலில் நின்றுகொண்டு சுயேச்சைகளாக போட்டியிடுகிறுர்கள்!

நாங்களும் தமிழ்ஈழத்துக்கு ஆதரவுதான்; கூட்டணிக்கு ஆதரவுதான் என்று கூறிக்கொண்டு, அதே வேளையில் கூட்டணி நிறுத்தியுள்ள அதிகார பூர்வமான வேட்பாளர்களை எதிர்த்து போட்டியிடுகிறுர்கள்; மக்களை மயக்குவதற்காக, தேர்தலில் வென்ற பின்னர் கூட்டணியுடன் சேரப்போவதாகவும் மாய்மாலம் வேறு காட்டுகிறுர்கள்!

**தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் பொதுத்தேர்தலை தமிழ்ஈழ விடுதலைக்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்தும் போது—கேவலம் தப்பித்தவறி ஒரு பாராளுமன்றப்பதவி கிடைத்தாலும் கிடைக்கக்கூடும் என்ற நப்பாசையுடன் கூட்டணி நிறுத்தியுள்ள வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட துணிந்த அற்ப சுயநல பித்தர்களான இந்த சுயேச்சைகள் தாஞ தமிழ்ஈழத்துக்கு போராடப்போகிறுர்கள்?**

**இன்றைய நெருக்கடி நிலையில் வெறும் சுய நலத்துக்காக—கூட்டணியை எதிர்த்து சுய இச்சைகளாகப் போட்டியிடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தமிழ் சமுதாயத்தின் புல்லுருவிகள் என்பதை தமிழ் சமுதாயம் உணரவேண்டிய நேரமிது. இவர்களுக்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்கும்—காட்டில் எறிக்கும் நிலவாக —கடலில் கரைத்த புளியாக — அவமாகப் போகின்ற வாக்கு என்பதை ஒவ்வொரு தமிழனும் தனது நெஞ்சத்தில் இருத்திக்கொள்ள வேண்டிய நேரமிது!**

நாங்களும் கூட்டணிதான்; நாங்களும் தமிழ் ஈழத்துக்குத்தான் என்று கூறிக்கொண்டு கூட்டணியையே எதிர்த்துப்போட்டியிடும் சுயேச்சைகளின் சுய நல வேடத்தை புரிந்துகொண்டு கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் மிகவும் திட்டவட்டமாக ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதாவது — கூட்டணியை எதிர்த்துப்போட்டியிடும் இந்த சுயேச்சைகள் வென்றுலும் சரி — தோற்றுலும் சரி—அவர்களுக்கு கூட்டணியில் இடம் கிடையாது என்று திரு. சிவசிதம்பரம் அவர்கள் திட்டவட்டமாக கூறியிருப்பது வரவேற்கத் தக்கது.

இன்றைக்கு தங்களுக்கு கூட்டணி "டிக்கெட்" தரவில்லையென்பதற்காக கூட்டணியை எதிர்த்து போட்டியிடுபவர்கள்—நாளை வேறு ஒரு பிரச்சினைவரும் போது தங்கள் சுயநலத்துக்காக கூட்டணியின் முதுகில் குத்த மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

எனவே சுய—இச்சைகளாக வந்து நாடகமாடுவோர் விஷயத்தில் தமிழினம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்; தெரிந்தவன், உறவினன், பழகியவன், ஊரவன், தலைவரின் மகன், ஒரே சாதிக்காரன், என்பன போன்ற எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் சுயேச்சை வேட்பாளர்களை ஆதரிக்க முற்படுவதோ அவர்களுக்காக பிரசாரம் செய்வதோ, வாக்குகளை விரயம் செய்வதோ கிஞ்சிற்றும் பயனற்ற வேலை என்பதுமட்டுமல்ல — தமிழ் சமுதாயத்தை பார்த்து மற்றவர்கள் எள்ளி நகையாடவும் இடமளிக்கும்!

சுயேச்சைகளுக்கு போடுகின்ற வாக்கு—தமிழன் சுதந்திரத்துக்கு எதிராக விழுகின்ற வாக்கு!

சுயேச்சைகளுக்கு விழுகின்ற வாக்கு— கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறுகின்ற செயலுக்கு கிடைக்கின்ற பாராட்டு!

சுயேச்சைகளுக்கு போடுகின்ற வாக்கு தமிழினத்தின் தேசிய அபிலாஷைகளுக்கு எதிராக விழுகின்ற வாக்கு!

இதை உணர்ந்துதேர்தலின் போது தமிழ் ஈழ அரசியலிலிருந்து சுயேச்சைகளை வேரோடு கிள்ளியெறிவது ஆரோக்கிமான அரசியலை நாடும் தமிழ் மக்களின் கடமையாகும்!

## சிங்கள நாட்டு பாராளுமன்றத்துக்கு கூட்டணி செல்லக்கூடாதாம்; சுயாட்சி கழகம் போகலாமாம்!

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உக்கள் கொழும்பிலுள்ள தேசிய அரசுப்பேரவைக்கு செல்லாமல் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்கி, தமிழ் ஈழத்தை பிரகடனம்செய்வோம் என எழுத்து மூலம் உறுதியளித்தால் தமிழர் சுயாட்சிக்கழகம் தேர்தலில் போட்டியிடாது வாபஸ் பெற்று கூட்டணி அபேட்சகர்களின் வெற்றிக்காக உழைக்கும்!"

—தமிழர் சுயாட்சிக் கழக துணைசெயலாளர்
(ஈழநாடு 12-2-77)

"சுயாட்சிக்கழகம் (சிங்களப்) பாராளுமன்றம் செல்வது எதற்காகவென்றுல் தமிழ்பேசும் மக்கள் மீது விரோதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் போதெல்லாம் தமிழர்களின் எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்பதற்காகவே! பாராளுமன்றத்தில் தமிழர்களின் உரிமைக்குரல் கேட்கவேண்டும். தமிழர்களின் உண்மையான விடுதலைக் குரலை அங்கு எழுப்பவேண்டும். இதற்காகத்தான் பாராளுமன்றம் செல்லவேண்டும். சிறுபான்மைத் தமிழர்களுக்கு காட்டப்படும் பாரபட்சங்களை போக்கவும் பாராளுமன்றத்தில் தமிழர் சுயாட்சிக் கழகம் நடவடிக்கையெடுக்கும்!"

—சுயாட்சிக் கழகத் தலைவர் வி. நவரத்தினம்
(தினகரன் 16-6-77)

## தலைவர் தொண்டமானுக்கு பெருகிவரும் ஆதரவு!

திரு. தொண்டமான் அவர்கள் கடந்த ஒரு வார காலமாக நுவரெலியா, மஸ்கெலியா தொகுதியில் பலபாகங்களுக்கும் வீடு வீடாகவும், கடைகளுக்கும் சென்று தனக்கு ஆதரவு திரட்டுகின்றுர். அவருடன் மக்களும் கூட்டம் கூட்டமாக பிரச்சாரவேலைகளில் ஈடுபடுகிறுர்கள். அவர் சென்ற இடமெலாம் மாலை அணிவித்து வெடிகள் கொழுத்தி ஆரவாரம்செய்தார்கள். சில இடங்களில் அவரது சின்னமான சேவலையே உயிருடன்கொண்டு வந்து அவரிடம் காட்டிதாம் அதற்குத்தான் வாக்களிப்போம் என்று ஆதரவுதெரிவித்தார்கள்.

தோட்டதுரை மார்களும் தொழிலாளர்களை முந்திக்கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தார்கள். சிங்கள வர்த்தகர்கள் பலர், அவர்களுடைய பௌத்த கலாச்சார அடிப்படையிலே வெற்றிலை, புகையிலை, தேங்காய் ஆகியவற்றை வைத்து அவருக்கு வணங்கி அவரை வரவேற்று தமது ஆதரவைத் தெரிவித்தார்கள். தலைவர் அவர்கள் மஸ்கெலியா, ஹட்டன், கொட்டாகலை, தலவாக்கெலை, அக்கரைப்பற்று, நானு ஓயா, நுவரெலியா ஆகிய இடங்களில் பிரச்சார வேலைகளை பூர்த்திசெய்துள்ளார். மிக விரைவில் யாழ் நகருக்குச்சென்று த. வி. கூ. வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் நடத்துவர். இதனை பார்க்கும்போது த. வி. கூ. இம்முறை சகல தொகுதிகளிலும் அமோக வெற்றி ஈட்டும் என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

### சூசைதாசனை ஆதரித்து மன்னுரில் மாபெரும் பொதுக் கூட்டம்!

மன்னுர் தொகுதியில் போட்டியிடும் த. வி. கூ. வேட்பாளர் திரு. சூசைதாசனை ஆதரித்து மன்னுர் முற்றவெளியில் 19-6-77 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் பொதுக்கூட்டமொன்று நடைபெறுகிறது. கூட்டத்தில் கூட்டணியின் முன்னணித் தலைவர்கள் உரையாற்றுவார்கள்.

### சிவனுலட்சுமணன் நிதி அளிப்பு!

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையினர் டெவன் தோட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் இறந்த சிவனு லட்சுமணன் குடும்பத்துக்கென தாம் சேர்த்த நிதியை 19-6-77 ஞாயிற்றுக்கிழமை டெவன் தோட்டத்துக்குசென்று நேரடியாகக் கையளிப்பார்கள். இவர்களுடன் நுவரெலியா த. இ. பேரவையினரும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்கள்!

### த. இ. பேரவை கிளை அமைப்பு


19-6-77ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா தொகுதியில் நானு ஓயா, றதல்ல, கிறேட் வெஸ்ரன்,மகா எலிய ஆகிய இடங்களில் தமிழ் இளைஞர் பேரவை கிளைகள் அமைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை த. இ. பே. கிளை அமைப்பாளர் த. மகாசிவம் செய்துவருகிறுர்.

### கேள்வியும் பதிலும்!

உடுப்பிட்டி தொகுதியில் யாரோ சில சமூக விரோதிகள் சில இடங்களில் "பனை ஏறும்......... பாராளுமன்றம் ஏன்?" என்று சாதியை இழுத்து சுவர்களில் எழுதி வைத்திருந்தார்கள். அதைக் கண்ட தமிழ் இளைஞர்கள்—அதன் கீழே அதற்குப்பதில் எழுதுவது போல "சாதிமத பேதமற்ற சமதர்மத் தமிழ் ஈழம் அமைப்பதற்கே!" என்று எழுதினுர்கள். இளைஞர்களின் இந்த எழுத் தோவியத்துக்குப் பின்னர், சமூக விரோதிகள் தாங்கள் எழுதுவதை நிறுத்திவிட்டார்கள்!

### செல்லத்தம்புவை ஆதரித்து முல்லைத்தீவில் கூட்டம்

முல்லைத்தீவு தொகுதியில் த. வி. கூ. சார்பில் போட்டியிடும் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களை ஆதரித்து 18-6-77 சனிக்கிழமை மாலை முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் திரு. ம. சூ. வஸ்தியாம்பிள்ளை தலைமையில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெறுகிறது. திரு. அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், டாக்டர் இல்யாஸ் ஆகியோர் உட்பட கூட்டணித் தலைவர்கள் அனைவரும் உரையாற்றுகிறுர்கள்.



### செல்லசாமிக்கு ஆதரவு திரள்கிறது

கொழும்பு மத்திய தொகுதியில் கூட்டணி ஆதரவுடன் இ. தொ. கா. வேட்பாளராக சேவல் சின்னத்துடன் போட்டியிடும் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களுக்கு நாளிலும் பொழுதிலும் ஆதரவு திரண்டுவருகிறது. செட்டித்தெரு, செக்கடித்தெரு, கன்னுரத்தெரு, ஆட்டுப்பட்டித்தெரு, சென்றல் ரோட், 4ம் குறுக்குதெரு 2ம் குறுக்குதெரு, 5ம் குறுக்குத்தெரு, கெய்சர் வீதி வீதி, நெல்வீதி ஆகிய இடங்களில் சென்ற வாரம் திரு. செல்லசாமி, தமது ஆதரவாளர்களுடன் சென்று ஆதரவு திரட்டினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டணியை எதிர்த்துப்போட்டியிடும் சுயேச்சைகள்; வென்ருலும்சரி தோற்ருலும் சரி கூட்டணியில் அவர்களுக்கு இடமில்லை!'

"தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் தேர்தலில் போட்டியிட அனுமதி கேட்டு அது கிடைக்காதவர்களும், வேறு சிலரும் தாங்களும் தமிழர் கூட்டணிதான் என்றும், வெற்றிபெற்ற பின்னர் கூட்டணியில் சேரப் போவதாகவும் கூறிக்கொண்டு சுயேச்சைகளாக கூட்டணியின் உத்தியோகபூர்வ வேட்பாளர்களை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களிடம் தமிழ் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இவர்கள் வென்ருல் என்ன — தோற்ருல் என்ன இவர்களுக்கு கூட்டணியில் இடம் கிடைக்காது என்பதை கூட்டணியின் செயல் அதிபர் என்ற முறையில் திட்டவட்டமாக இப்போதே கூறிவைக்க விரும்புகிறேன்"

—மேற்கண்டவாறு த. வி. கூட்டணி உடுப்பிட்டி வேட்பாளர் திரு. த. இராசலிங்கம் அவர்களை ஆதரித்து துன்னாலை தாமரைக் குளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்துக்கு உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் பா.உ. திரு. க. ஜெயக்கொடி தலைமை வகித்தார்.


திரு. சிவசிதம்பரம் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:—

"தமிழினத்தைப் பொறுத்தவரை இது சாதாரண தேர்தல் அல்ல. தமிழ்ஈழம் அமைப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பாக இத்தேர்தல் அமைந்துள்ளது. சிங்கள மக்கள் மட்டுமன்றி, உலக நாடுகளும் இத்தேர்தலை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கின்றன. தமிழினத்திற்காக நாம் நியாயம் கேட்கும் இவ்வேளையில் எம்மினத்தில் உள்ள மூன்றிலொரு பகுதி மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது மிக அவசியமாகும். இதனை சிங்கள அரசியல் தலைவர்களும் எமக்கு அடிக்கடி சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால்தான் மூன்றிலொரு பகுதி தமிழர்களான சிறுபான்மைத் தமிழர்களுக்கு நாம் நியாயமும், சம அந்தஸ்தும் வழங்குவதற்காக திரு. இராசலிங்கத்தைப் போட்டிக்கு நிறுத்தி செயலில் காட்ட விரைந்துள்ளோம்;

திரு. இராசலிங்கம் தோற்ருல் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டுவிடும். இவர்களின் விரக்தியையும், வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்டு தமிழினம் பூரணத்துவமான முடிசூட்டு விழாவை எதிர்பார்க்க முடியாது.



முன்னெப்போதும் என்னைச் சொந்தம் பாராட்டாத பலர் இன்று என் பெயரைச் சொல்லி உங்களிடம் கொண்டாடி வருகிருர்கள். அவர்கள் சொல்லி எனக்கு தொகுதி கிடைக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்போர்வையில் வருபவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டாம். தாமும் கூட்டணிக் கொள்கைதான் என்று பல சுயேச்சை வேட்பாளர்கள் கூறி வருகின்றனர். அவர்கள் வென்ருல் என்ன தோற்ருல் என்ன அவர்களுக்கு கூட்டணியில் இடமில்லை. நான் நல்லூர்த் தொகுதியில் வெற்றியீட்ட வேண்டுமானல் என்மீது அன்பும், ஆதரவும் கொண்ட மக்கள் திரு. இராசலிங்கத்தை வெற்றியீட்ட வைக்கவேண்டும் என்ருர்.



மன்னர் கச்சேரியில் தனது வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டு, மன்னர் த. வி. கூ. வேட்பாளர் திரு. சூசைதாசன் தனது ஆதரவாளர்கள் புடைசூழ வெளியே வரும் காட்சி படத்தில் கூட்டணிப் பிரமுகரும், அடம்பன் கி. ச. தலைவருமான திரு. செபமாலையும் காணப்படுகிருர்.

## செயலதிபர் சிவசிதம்பரம் அறிவிப்பு!

உடுப்பிட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. த. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

'இலங்கையில் இதுவரை காலமும் நடைபெற்ற பொதுத்தேர்தல்கள் அரசியல் ஞானமற்றது. தமிழ் மக்கள் மத்தியில் ஒருமைப்பாடு இப்போது அவசியம் என உணரப்பட்டுவிட்டது. அதனல் கூட்டணி இட்ட கட்டளைக்கிணங்க பட்டம், பதவி வளமான வாழ்வு இவற்றையெல்லாம் விடுத்து

—8-ம் பக்கம் பார்க்க

## சிங்கள நாட்டை ஆள்வது யார் என்ற....

—1-ம் பக்கத் தொடர்

**ஒரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை தருவதாக சிங்கள அரசாங்கம் கூறினலும், நாம் அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று ஆணித்தரமாக அறிவித்தார்.**

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரகடனமும்—1977 பொதுத்தேர்தலும்" எனும் தலைப்பில் திரு. கதிரவேற்பிள்ளை அங்கு உரை நிகழ்த்திய போது மேலும் கூறியதாவது:—

"கடந்த 400 ஆண்டுகளாக அந்நிய ஆட்சிகளின் கீழ் தொடர்ந்து அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்ஈழ நாட்டை விடுதலையடையச் செய்வதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியமாகும். தமிழ்ஈழமும், சிங்கள நாடும் அந்நியன் போட்ட பலவந்தமான 'சிலோன்' என்ற செயற்கைப் பிணைப்பினல் கட்டுப்பட்டுக்கிடக்கிறது. இந்தப் இணைப்பை அறுத்துக்கொண்டால் மட்டுமே இரு நாடுகளும் சுதந்திரமாக வாழ முடியும்.

அந்த அடிப்படையிலே தான்—எதிர்வரும் பொதுத்தேர்தலை தமிழ்ஈழத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக பயன்படுத்த முயற்சிக்கிருேம். தமிழ் ஈழமக்கள் தங்கள் இழந்த நாட்டை மீண்டும் சுதந்திர நாடாக புனரமைக்கவிரும்புகிருர்களா இல்லையா என்பதையே தமிழ் ஈழத்தில் நடைபெறும் பொதுத்தேர்தல் மூலமாக சர்வஜனரீதியில் எடுத்துக்காட்டவிரும்புகிறேன். சர்வஜன வாக்கெடுப்புக்கு பொதுத்தேர்தல் ஒரு சரியான ஆயுதம் அல்ல என்ருலும் — நாம் கூடியவரை பொதுத்தேர்தலை அதற்காக பயன்படுத்த முயற்சிக்கிருேம்.

இந்த சுதந்திர தமிழ் ஈழத்தை, அஹிம்சை முறையிலே அமைத்துக்கொள்ளவே நாம் முயற்சிக்கிருேம் —ஆனல் நமது இளைஞர்களோ — ஏனைய நாடுகளிலுள்ள விடுதலை இயக்கங்களைப்போல தீவிரமாக போரிட்டுத்தான் விடுதலை பெறமுடியும் என்று கருதி அதற்குத் தயாராகி வருகிருர்கள், நமது பாதையில் சென்று தமிழ் ஈழ அரசை நிறுவுவது சாத்தியமில்லையெனக் கண்டால், இளைஞர்களின் பாதை சரியென்பதே அர்த்தமாகும்.

மதசார்பற்றதாக — சாதிபேதமற்றதாக அமையும் தமிழ் ஈழம், எல்லா மதங்களுக்கும் சமத்துவம் அளிக்கும். இந்த தமிழ் ஈழத்தில், முஸ்லிம்களும் பூரண சுயநிர்ணய உரிமைகொண்ட ஒரு தனி இனமாக தமது தனித்தாயகத்தில் பிரிந்து போகும் உரிமையுடன்கூடிய சுயாட்சியை அனுபவிப்பார்கள்.

சிங்கள நாட்டிலுள்ள எல்லா அரசியற் கட்சிகளின் தலைவர்களும் [illegible] அழைத்துப்பேசினார்கள் எல் [illegible]லோரிடமும் எமது நிலையை எடுத்து கூறிவிட்டோம்; சிங்களவர்களுடன் மோதல்களின்றி — இரத்தம் சிந்தாமல் சமாதானமாகப் பிரிந்து போவதையே நாம் விரும்புகிருேம். அதே வேளையில் எம் உயிரைவிட சுதந்திரத்தையே நாம் நேசிக்கிருேம்.

தமக்கு ஆட்சியமைப்பதற்கு அறுதிப்பெரும்பான்மை கிடைக்காதவிடத்து, கூட்டணி தம்மையே ஆதரிக்கப்போவதாக ஒவ்வொரு சிங்களக் கட்சியும் கூறிவருகிறது. கூட்டணியைப் பொறுத்தவரை சிங்களநாட்டு அரசியலில் இனிமேல் நாம் தலையிடமாட்டோம். சிங்கள நாட்டை யார் ஆளவேண்டுமென்பது சிங்களவர் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை. எந்த சிங்கள கட்சியும் ஆட்சியமைப்பதற்கு நாம் உதவி புரியமாட்டோம். தந்தை செல்வாவிடம் கடிதம்பெற்றுச்சென்று அதைக்காட்டி காலஞ்சென்ற டட்லி சேனநாயகா பிரதமரானதுண்டு. அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இனி அறவே இடமில்லை. நீங்கள் உங்கள் அலுவல்களை பாருங்கள்—நாங்கள் எங்கள் அலுவல்களை பார்க்கிருேம் என்பதே சிங்கள அரசியற் கட்சிகளுக்கு நாம் கூறக்கூடிய பதிலாகும்!!

இவ்வாறு திரு. கதிரவேற்பிள்ளை கூறினர்.

இக்கூட்டத்தில் இ. தொ. கா. தேர்தல் விஞ்ஞாபனத்தை விளக்கி, இ. தொ. கா. பிரமுகர் திரு. என். [illegible]

## அண்ணயுகத்தில் மூன்ரு....

—1-ம் பக்கத் தொடர்

கைப்பற்றியுள்ளது.

பெரும்பாலும் நகரப்புறத் தொகுதிகள் அனைத்தையும் திராவிடமுன்னேற்றக் கழகமே கைப்பற்றியுள்ளது. தி. மு. க. தலைவர் கலைஞர் கருணநிதி சென்னை அண்ணநகர் தொகுதியிலிருந்து 43,076 வாக்குகளினல் வெற்றியீட்டினர். அருப்புக்கோட்டைத் தொகுதியில் எம். ஜி. ஆர். அவர்கள் 39,348 மேலதிக வாக்குகளினல் பெருவெற்றியீட்டினர்.

அ.இ.அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் நாஞ்மனேகரன், திமுக பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன், திமுக பொருளாளர் திரு. சாதிக்பாட்சா, முன்னள் திமுக அமைச்சர் பா.உ. சண்முகம், முன்னள் சபாநாயகர் புலவர் கோவிந்தன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

திருமதி சத்தியவாணி முத்து, (அ. தி. மு. க.) சி. பா. ஆதித்தனர் (சுயேச்சை) ஆகியோர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

இத்தேர்தலில் நாவலர் நெடுஞ்செழியனின் மக்கள் திமுக எம்.ஜி.ஆர். கட்சியை ஆதரித்தது.

உண்மையான அண்ணவின் இலட்சியங்களைக் கொண்ட ஊழலற்ற தூய்மையான மக்களாட்சியை அமைப்பேன் என்று தமிழக மக்களுக்கு திரு. எம்.ஜி. ஆர். அவர்கள் அளித்த வாக்குறுதியை பூரணமாக நம்பி— ஆட்சியை அவரிடம் ஒப்படைத்திருக்கிருர்கள் தமிழகமக்கள்- திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி அண்ணவின் வழிநின்று தமிழ்நாட்டு மக்களுக்கு சிறந்த பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிருர்கள் ஈழ்த்தமிழ் மக்கள்.

அதே சமயத்தில் எத்தனையோ நெருக்கடிகளையும் சோதனைகளையும், உட்பூசல்களையும் பிளவுகளையும் சந்தித்த போதும் — அவற்றையெல்லாம் சமாளித்து, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 48 தொகுதிகளை பெற்றுக்கொடுத்து கழகத்தை காப்பாற்றிய கலைஞர் கருணநிதியின் ஆற்றலும், திறமையும் அனைவரையும் பிரமிக்க வைத்துள்ளது.


## 'ஒலிவ் ஸ்நானப் பவுடர்'

எண்ணெய் முழுக்குக்கு சிறந்தது.

தலை மயிரிலுள்ள அழுக்கு, பிசான்; சொடுகு; பேன்; ஆகியவற்றை நீக்கி, கண்ணுக்குக் குளிர்ச்சியையும். தலைமயிருக்கு வளர்ச்சியையும் தருகின்றது. வாங்கி உபயோகியுங்கள்.

ஓர் மில்வைற் தயாரிப்பு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய இனத்தின் மீது ஏவிவிடப்பட்ட சிங்கள இனவெறித் தாக்குதல்கள்!

## 1500 சதுர மைல் தமிழர் நிலம் இதுவரை ஆக்கிரமிப்பு!

—2-ம் பக்கத் தொடர்

படாமையால் இயங்காதிருக்கின்றன. இவற்றினுல் பல இடங்களில் தமிழ் மாணவர்கள் சிங்களம் மூலம் கல்வி கற்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். வட மாகாணத்திலேயேபௌத்த சிங்களப் பாடசாலைகளை அங்கீகரித்து ஒரு சிலருக்கு ஆசிரியர் நியமனம் என்று ஆசையைக் காட்டி தமிழ் குழந்தைகளுக்குச் சிங்களத்தைப் போதனு மொழியாக்கும் தைரியம் சிங்கள அரசாங்கத்திற்கு ஏற்பட்டதென்ருல் தமிழ் இனத்தை அழிக்கும் ஏகாதிபத்திய வெறியின் தீவிரத்தைக் கணிக்கக் கூடியதாக இருக்கின்றது.

கல்வியில் தமிழ்பேசும் மாணவர்களுக்கு மிகப் பாரதூரமான அநீதி இழைக்கப்பட்டது. 1970ம்ஆண்டின்பின் பல்கலைக்கழகப் பிரவேசத்திலாகும், அந்த ஆண்டில் தரப்படுத்தல் என்று அநியாயமான திட்டம் கொண்டு வரப்பட்டுத் தகுதி வாய்ந்த தமிழ் பேசும் மாணவர்கள் பலர் பல்கலைக்கழக வைத்திய பொறியியல் விஞ்ஞான பீடங்களில் இடம் பெருது தடுக்கப்பட்டனர். 1970ம் ஆண்டு வைத்தியத்துறைக்கு 229 புள்ளி பெற்ற சிங்கள மாணவர் அனுமதிக்கப்பட 250 புள்ளி பெற்ற தமிழ் மாணவனே இடம் பெருன். அதேபோல பேராதனை பொறியியல் பீடத்திற்கு 227 புள்ளி பெற்ற சிங்கள மாணவனேடு 250 புள்ளி பெற்ற தமிழ் மாணவனே அனுமதிக்கப்பட்டான். 249 புள்ளி பெற்ற தமிழ் மாணவன் இடம் பெறமுடியாத பீடத்தில் 227 புள்ளி பெற்ற சிங்கள மாணவன் இடம் பெறும் அக்கிரமம் சகிக்க முடியாததாகும்.

கடந்த ஏழு ஆண்டுகளாகப் பல்வேறு உருவத்தில் இத்தரப்படுத்தல் இடம் பெற்று ஒவ்வொரு துறையில் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தமிழ் மாணவரின் எண்ணிக்கையைக் குறைத்து வருகின்றது. ஒரு உதாரணத்தை மாத்திரம் காட்டுவதாயின் 1969ம் ஆண்டு பல்கலைக்கழகப் பொறியியல் துறைக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களில் 40.8 வீதத்தினர் தமிழ் மாணவர்கள். இவ்விகிதாசாரம் ஒவ்வொரு ஆண்டும் தரப்படுத்தல் முறையினுல் குறைக்கப்பட்டு 1974ல் 16.3 வீதம் ஆகியது. 1975, 1976ல் இன்னும் குறைந்துவிட்டது. இந்த அநீதியினுல் மிகவும் பாதிக்கப்பட்டோர் தமிழ் சமுதாயத்தில் அதிகம் பின் தங்கிய மக்களே என்பதை எவரும் உணர்வர். தனிப்பட்ட ஆசிரியர்களை வைத்து இக் கொடிய பரீட்சைக்கு ஊடாகவும் தம் பிள்ளைகளை நுழையவைக்கும் வாய்ப்பற்ற தமிழ்ப் பெற்ருேர். தம் பிள்ளைகளின் உயர்கல்வியை மறக்கவேண்டியவர்களாகின்றனர். இதன் பலனுக தமிழ் மாணவர் சமுதாயம் விரக்தியின் விழிம்பிற்குத் தள்ளப்பட்டுத் தம் எதிர்காலத்தையிட்டு ஏக்கங் கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டனர். இந்த சந்ததியில் தன்னம்பிக்கையுள்ள மக்களாக வாழ்வதற்கு இந்த அக்கிரமத்திற்குக் காரணமான சிங்கள ஆட்சி அகலவேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியுமா.

### 7. தொழில் வேலை வாய்ப்பு

கல்வியில் கைக்கொள்ளப்படும் அதே பாரபட்சக் கொள்கை இன்னும் மோசமான முறையில் வேலை வாய்ப்பு வழங்குவதில் கையாளப்படுகிறது. நாட்டு மக்கள் தொகையில் 25 வீதமான தமிழ் மக்களில் ஆயுதப்படைகளுக்கு 7வீத மானவர்கள் கூடத் தெரிவுசெய்யப்படுவதில்லை. பொலிஸ் படையில் காவலர் வரிசையில் 5 சத வீதம் இடங்களும், மேலிடங்களில் இன்னும் குறைந்த வீதங்களுமே கிடைக்கின்றன, எழுதுவினைஞர், தொழில்நுட்ப ஊழியர் தரங்களிலும் அதே வீதமே தமிழ் பேசும் ஊழியர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். கடந்தகாலத்தில் கல்வியில் சமசந்தர்ப்பம் கிடைத்த காரணத்தினுல் வைத்தியர், பொறியியலாளர் முதலிய பதவிகளில் தமிழ் ஊழியர் இடம்பெற முடிந்தது. தரப்படுத்தலின் தாக்கத்தினுல் இங்கும் ஜனத் தொகை வீதத்திற்கு மிகவும் குறைந்த இடங்களே கிடைக்கின்றன. சிற்றூழியர்களுக்கு தமிழ் பகுதிகளில் ஏற்படும காலியிடங்களுக்கு அனுராதபுரம், பதுளை முதலிய பிரிவுக் கந்தோர்களிலேயே ஆட்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். மின்சார சபையில் யாழ்ப்பாணப் பகுதிக்கு சமீபத்தில் அனுராதபுரத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிற்றூழியர்களில் 66 சிங்கள ஊழியரும் இரண்டு தமிழ் ஊழியர்களும இடம்பெற்றிருந்ததை ஓர் உதாரணத்திற்கு எடுத்துக்காட்டலாம். அரசின் தேசியமயக்கொள்கையினுல் தனியார்துறை அருகிவரும் நாட்டில் அரசாங்கம் வேலைவாய்ப்புக்களை வழங்குவதில் இவ்வளவு மோசமான பாரபட்சக் கொள்கையைக் கையாண்டால் தமிழ் தேசிய இனத்தின் பொருளாதார வாழ்வு எக்கதியை அடையப்போகின்றது, என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டாமா? எமக்கு வளமான பொருளாதாரம் வேண்டுமாயின் எம்மை நாமே ஆளவேண்டும் என்பதில் எள்ளவும் ஐயமுண்டா?

### 8. தமிழ் ஈழ பொருளாதார அபிவிருத்தி

இன்று தமிழ் ஈழத்தில் இயங்கிவரும் அரசாங்கத் தொழிற்சாலைகள் 20 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்டவையே. அதன்பின் வெளி நாடுகளின் உதவியோடு நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் அத்தனையும் சிங்கள நாட்டிலேயே நிறுவப்பட்டிருக்கின்றன. தமிழ் பிரதிநிதிகளும் பங்குகொண்டிருந்த அரசினுல் 1965-70ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கச்சாய் உப்பளம், காங்கேசந்துறைத் துறைமுக அபிவிருத்தித்திட்டம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் போன்ற திட்டங்கள் எல்லாம் கடந்த ஏழுஆண்டுகளாகக்கைவிடப்பட்டுவிட்டன. அரசாங்கத்தின் முக்கிய நீர் பாய்ச்சல் திட்டங்கள் எதுவும் தமிழ் ஈழத்தை வளப்படுத்த மாட்டா. தமிழ் ஈழத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் பொருட்டு நிறைவேற்றப்பட்ட கல்லோயா, அல்லை, கந்தளாய் போன்ற திட்டங்களைத் தவிர தமிழரினதோ முஸ்லிம்களினதோ நல் வாழ்வை நோக்காகக்கொண்டு தமிழ்ஈழத்தில் பாரிய நீர்ப்பாய்ச்சல் திட்டங்களெதுவும் கடந்த இருபது வருடங்களாக நிறைவேற்றப்படவில்லை. வெறும் கண்துடைப்பாகச் சில சிறு திட்டங்களே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. சோவியத் நாட்டின் உதவியுடன் எண்ணெய் வள ஆராய்ச்சி மன்ருரில் ஆரம்பித்தபோது அப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துத் 90 வீதமான ஊழியர்கள் சிங்கள பிரதேசத்திலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டனர். தனியார் துறையில் தானும் தமிழ்ப் பிரதேசத்தில் கைத்தொழில் ஆரம்பிப்பதற்கு அரசாங்க அனுமதிபெறுவது மிகவும் கடினமாகும். தமிழ்ப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட சில சிறிய தொழிற்சாலைகளில் தானும் மிகப் பெரும்பாலாகச் சிங்கள ஊழியர் இடம்பெறுகின்றனர். தமிழ்ப்பேசும் மக்கள் அரச துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதில் புறக்கணிக்கப்படுவது மாத்திரமின்றி தமிழ் பிரதேசங்களே பொருளாதார அபிவிருத்தியில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களாக்கப்பட்டிருக்கின்றன.

### 9. இனவெறிப் பயங்கரம்

தமிழ் தேசிய இனம் இந் நாட்டில் எவ்வித பாதுகாப்போ, உரிமையோ அற்ற [illegible] தமிழ் மக்கள் மீதும் இந் நாட்டில் கடந்த இருபது வருடங்களாக இனவெறிப் பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களக் காடையர்களினுலும், பொலிசாரினுல்ம், ஆயுதப்படைகளினுலும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பல தடவைகள் தாக்கப்பட்டுத் தங்கள் உயிரை இழந்தும், உடமைகளை இழந்தும், கற்பை இழந்தும், பாரதூரமான காயங்களை அடைந்தும், வீடுகள், கடைகள், தொழில் நிலையங்கள் சூறையாடப்பட்டும், தீயிடப்பட்டும் சொல்லொணுத் துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

1956ம் ஆண்டு கொழும்பிலும், அரசாங்கத்தினுல் சிங்கள நாடாக்கப்பட்ட தமிழ் ஈழத்தின் ஒரு பாகமான அம்பாறையிலும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். துறை நீலாவணை போன்ற பழந் தமிழ்க் கிராமங்களே சிங்களக் காடையரினுல் தாக்கப்பட்டு அத்தமிழ் மக்கள் துப்பாக்கி ஏந்தித் தம் வீடுகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1958ம் ஆண்டு சிங்கள நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற இன வெறியாட்டம் இந்நாட்டின் வரலாற்றில் ஓர் பயங்கரமான கறைபடிந்த அத்தியாயம். பல்லாயிரம் தமிழ் மக்கள் கப்பல்களிலும் இராணுவத்தினுல் பாதுகாக்கப்பட்ட வண்டிகளிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அகதிகளாககொண்டு செல்லப்பட்டனர். பல்கோடி பெறுமதியான சொத்துக்களை இழந்தனர். பலநூறு பேர் உயிர் இழந்தார்கள். பல்லாயிரவர் வீடிழந்தனர். பல பெண்கள் கற்பிழந்தனர். கர்ப்பிணித் தமிழ் பெண் நடு வீதியில் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுவிட்டாள். பாணந்துறையில் முருகன் ஆலய அர்ச்சகர் உயிரோடு கொழுத்தப்பட்டார். மகா ஓயாவில் ஒரு கிணற்றில் மாத்திரம் எத்தனையோ தமிழ்ப் பிரரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. தமிழ் மக்களுக்கு எதிராக இத்தனையும் நடைபெற சிங்கள அரசாங்கம் தமிழ் தலைவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துவைத்த தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்ட இன்னலின்மேல் நிந்தனையையும் தந்தது.

1961ம் ஆண்டு மொழியுரிமை கோரி சாத்வீகச் சட்ட மறுப்பில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் இராணுவக் காட்டாட்சியை கட்டவிழ்த்துவிட்டது அரசு.

1974ம் ஆண்டு உலகத் தமிழ் அறிஞர்கள் கூடித் தமிழ்ச் சிறப்பை ஆராய்ந்த மகாநாட்டின் இறுதி நாளன்று, தை 10ந் திகதி, பேராசிரியர் நையினர் முகமதுவின் தமிழ் இலக்கியப் பேச்சை மெய்மறந்து கேட்டிருந்த தமிழ் மக்கள் மீது சிங்களப் பொலிசார் நடத்திய காட்டுமிராண்டித் தாககுதல் போல் நாகரீக நாடெதிலும் நடந்திருக்கமுடியாது. ஒன்பது தமிழர்கள் பலியான அக்கொடுஞ்செயலைப் பற்றி விசாரணை நடத்தவோ, பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவோ ஆட்சியாளர் மறுத்தது அவர்கள் தமிழ் மக்களை நடத்தும்போக்கை நன்கு காட்டுகின்றது.

ஆலயத்தில் வழிபட்டுச் சென்ற பரராசா பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டான். பொலிஸ் அதிபரின் காரியாலயத்திற்கு முறையிடச்சென்ற தமிழ் தலைவர்கள் அங்கேயே சீருடை அணியாத சிங்களப்பொலிசாரால் தாக்கப்பட்டனர். தோட்டப்பகுதியில் தமிழ் வீடுகளில் இருந்து வீதிக்கு துரத்தப் படுவதற்கு மறுப்புதெரிவித்த இளைஞன் இலட்சுமணன் பொலிசாரால் சுடப்பட்டு பிணமாக்கப்பட்டான் கம்பளையில் தமிழ்த்தோட்டத்தொழிலாளரின் வீடுகள் சூறையாடப் பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. இதே போன்று இந்நாட்டு முஸ்லிம் மக்களின் மீதும்சென்ற சில ஆண்டுகளாக சிங்களக் காடையரின் வெறியாட்டமும் சிங்களப்பொலிசாரின் நியாயமற்ற தாக்குதலும் நடைபெற்றிருக்கின்றது. 1976ம் ஆண்டில் மாத்திரம் மகியங்கனை, கம்பளை, பாணந்துறை, நிக்கவரெட்டியா முதலிய ஏறத்தாழ 40 இடங்களில் பாதுகாப்பற்ற முஸ்லிம் மக்கள் சிங்களக் காடையரின் தாக்குதல்களுக்கு ஆளாகினுர்கள். அவர்கள் பல லட்சம் ரூபாய்களைப் பறிகொடுத்தார்.

1976ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ந் திகதி புத்தளம் பள்ளி வாசலில் வழிபாடு செய்து கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் சிங்களப் பொலி

—7-ம் பக்கம் பார்க்க

---

**உண்மையான சமதர்ம சோசலிசத்தை வலியுறுத்துகிறது கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம்!**

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் உண்மையான சமதர்ம சோசலிசத்தை வலியுறுத்துகிறது. இவ்விஞ்ஞாபனத்தை என் போன்ற சோசலிசவாதிகள் பாராட்டாமல் இருக்கமுடியாது. உலக விடுதலை விரும்பிகள் முன்வைத்த சோசலிசக் கருத்துக்கள் இவ் விஞ்ஞாபனத்தில் அடங்குகின்றன. ஆகவே இவ்விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை பெரு வெற்றியடையச் செய்தால்தான் நாம் விரும்பும் சோசலிச தமிழ் ஈழம் மலரமுடியும். உண்மையான சோசலிச அமைப்பு உருவாக்கப்படவேண்டும். எமது மொழியைக் காத்தால் மட்டும் போதாது, நிலத்தையும் காக்கவேண்டும் அப்போதுதான் நமது இனம் வாழும்!"

—தெல்லிப்பளை சந்தியில் நடைபெற்ற த. வி. கூ. பிரசாரக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கை வீரர்களைக் கொண்டது காவலூர் தொகுதி!

## அங்கு பண்டிதர் வெல்வார் என்பது உறுதி!

ஊர்காவற்றுறை தொகுதி என்றைக்குமே தமிழின உணர்ச்சி நிறைந்த தொகுதி; தந்தை செல்வாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற இலட்சிய வாதிகள் நிறைந்த தொகுதி; தனி மனிதரைப் பாராமல், கட்சியையும், அதன் கொள்கையையும் சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்கின்ற கொள்கை வீரர்கள் நிறைந்த தொகுதி; இயக்கத்தை விட்டு இடையிலே ஓடிப் போனவர்களுக்கு கடந்த தேர்தலின்போது சரியான பாடம் புகட்டிய தொகுதி; அற்பத்தனமான சலுகைகளை எதிர் பார்க்காமல் இன சுதந்திரத்தை நாடுகின்ற இயக்க வீரர்கள் நிறைந்த தொகுதி. இத்தகைய தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிடும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மீண்டும் மாபெரும் வெற்றியீட்டப்போவது என்றே முடிந்த முடிபாகிவிட்டது.


காவலூர் தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் நாடு முழுவதும் அறிந்த அரசியல் தலைவர்; ஓய்வேது ஒழிவேது தமிழ்ப் பணிக்கு—உணவேது உறக்கமேது? என்று எந்த நிமிடமும் தமிழுக்கும் இனத்துக்கும் இயக்கத்துக்கும் தொண்டாற்றி வருபவர்; தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் தன் புகழ்க் கொடியை பறக்கவிட்டுள்ள மிகச் சிறந்த அறிஞர். தேசிய அரசப் பேரவையில் தன் கேள்விக்கணைகளால், சிங்கள ஏகாதிபத்தியத்தை நாள்தோறும் கிடு கிடுக்க வைத்தவர். ஈழத்தில் எங்கு தமிழன் துன்பப்பட்டாலும், அவனுக்காக வாதாடுபவர், போராடுபவர்—தனது தொகுதிக்கு மட்டுமே சேவை செய்வது என்ற குறுகிய நோக்கமின்றி, தமிழன் எங்கு வாழ்ந்தாலும், அவனுக்கு சேவை செய்ய ஓடோடி வருபவர்.

காவலூர் தொகுதியின் அபிவிருத்திகளுக்காக மட்டுமல்ல—தமிழ் ஈழம் முழுவதன் அபிவிருத்திக்காகவும் வாதாடி வருபவர் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் காவலூர் தொகுதியும், ஏனைய தமிழ் ஈழத்தொகுதிகளும் புறக்கணிக்கப்படுவது கண்டு, குமுறியெழுந்து குரல் கொடுத்து, பாரபட்சத்தை அம்பலப்படுத்தி, தமிழ் ஈழத்துக்கு அதிக நிதிபெற்றுக் கொடுத்தவர்.

தமிழுக்கும், இனத்துக்கும் எங்கேயொரு சிறு அவமதிப்பு நிகழ்ந்தாலும், உணர்ச்சிவசப்பட்டு துடித்தெழுந்து அதற்காகப் போராடுபவர்; தமிழை உளமார நேசிக்கின்ற தமிழ்ப் புலவர்—பண்டிதர்.

அவரை மீண்டும் இத் தேர்தலில் காவலூர் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளராக நியமித்திருக்கிறது. அவரை கொள்கை அடிப்படையில் மோதி வெல்ல முடியாதெனக்கண்டவர்கள், இப்போது அற்பத்தனமான ஊர்ப்பிரிவினைகளையும், இந்தப்பகுதியை பண்டிதர் புறக்கணித்தார் — அந்தப் பகுதியை பண்டிதர் புறக்கணித்தார் — என்பது போன்ற திட்டமிட்ட பொய்ப் பிரசாரங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் சமுதாயம் ஒன்றுபட்டு தனது விடுதலைக் குரலை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்வதற்காக—எதிர்வரும் பொதுத்தேர்தல் பயன்படுத்தப்படவிருக்கிறது; சுதந்திரத் தமிழ் ஈழம் என்ற புனித இலட்சியம் ஒன்றே இந்தத் தேர்தலின் அடிப்படை நாதம்; இதை மறந்து — மக்களை திசை திருப்புவதற்காக, சாதி, மத, பிரதேச ஊர்ப் பிரிவினைகளை கிளப்புபவர்கள்



யாராக இருந்தாலும், அவர்கள் தமிழ் சமுதாயத்தின் முதல் நம்பர் விரோதிகளே!

காவலூர் தொகுதிமக்கள் சிறந்த கொள்கை வீரர்கள், தமிழரசுக்கட்சி — தமிழர் கூட்டணிமீது அபாரநம்பிக்கையும் விசுவாசமும் கொண்டவர்கள்; ஆளுனப்பட்ட அல்பிறட் தம்பியையாவையே 1956ம் ஆண்டுத் தேர்தலில் நிராகரித்தவர்கள்; கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, புதுக்கட்சியமைத்த சுயாட்சி நவரத்தினத்துக்கு 1970 பொதுத் தேர்தலில் சரியானபாடம் புகட்டியவர்கள்; அப்படிப்பட்டவர்களிடம் இத்தகைய இன விரோத—சமுதாய விரோத—பிரசாரங்கள் எடுபடாது என்பது எங்களுக்குத் தெரியும்.

காவலூர் தொகுதியிலே சென்றதேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட திரு. வி. நவரத்தினம் இப்போது போட்டியிடுகிறார்.

சென்ற தேர்தலில் ஊர்காவற்றுறை மக்களால் நிராகரிக்கப்பட்டவுடன் "ஊர்காவற்றுறை மக்கள் என்க்கு கொள்ளிவைத்து விட்டார்கள்" என்று தொகுதிமக்களை "திட்டி விட்டு" சென்ற நவரத்தினம், இப்போது தேர்தல் சமயத்தில் மீண்டும் தலைகாட்டியிருக்கிறார்.

கடந்த ஏழு ஆண்டுகள் அவர் என்ன செய்தார்—எங்கே இருந்தார் என்பது யாருக்கும் தெரியாது!

1972ம் ஆண்டிலிருந்தே கூட்டணியில் வந்து சேரும்படி நவரத்தினத்தை அழைத்தோம்— ஒவ்வொரு குற்றம் குறைகளைக் கூறி—அந்த அழைப்புக்களை நிராகரித்து வந்தவர் திரு. நவரத்தினம்.

தேர்தல் சமயத்தில்—கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து ஓடிவந்து தனது கட்சிக்கு இரண்டு தொகுதி தந்தால் கூட்டணியுடன் சேருவேன் என்று பேரம் பேசினார். "தேர்தல் கால பேரத்துக்கு" கூட்டணி இணங்க மறுத்துவிட்டது. இதன் காரணமாக இப்போது கூட்டணி மீது குற்றங் குறைகளை தேடித்தேடி சுமத்திக்கொண்டு—தேர்தல் கோதாவில் இறங்கியுள்ளார் நவரத்தினம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த ஏழு ஆண்டுகளாக தன்னுடைய இலட்சியப் போராட்டத்தில் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எத்தனையோ போர்க்களங்களை சந்தித்த போது அமைதியாக தூங்கிக் கிடந்தவர் நவரத்தினம்.

1972 மே 22ம் நாள் சிங்கள குடியரசு அரசியலமைப்பை எதிர்த்து கூட்டணியின் தலைமையில் தமிழ் சமுதாயம், மூன்று நாட்கள் தொடர்ச்சியாக போராடியபோது "அரசியல் சட்டத்துக்கு எதிராக நம்மால் ஏதும் செய்ய இயலாது—அமைதியாக வீட்டில் இருப்போம்" என்று தமிழ் மக்களுக்கு அறிக்கைவிட்ட கையாலாகாத "சூராதி சூரர்" இந்த நவரத்தினம்!

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் அங்கே களத்தில் நின்றபோது—திரு நவரத்தினம் இங்கிலாந்திலே சாய்மனைக் கதிரையிலே ஓய்வு எடுத்தவர்.

தனிநாடு கோருவது சட்ட விரோதம் என்று அவசரகாலச் சட்டத்தை ஏவி விட்டு, 1976ம் ஆண்டு அரசாங்கம் பிரகடனப் படுத்திய நேரத்தில், அச்சட்டத்தை மீறி 'தனிநாடு' கோரும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து கைது ஆனவர் பண்டிதர் இரத்தினம் - இதன் காரணமாக பத்து நாட்கள் தடுப்புக்காவலில் இருந்தவர்; வழக்கு நடந்திருந்தால், 20 வருட சிறைத்தண்டனைக்கும் சொத்துப் பறிமுதலுக்கும் உள்ளாகியிருப்பார் அவர்.

'தனிநாடு' தடைச் சட்டம் வந்தபோது, அதை எதிர்க்க வக்கின்றி, துணிவின்றி மூலைக்குள் சுருண்டு கிடந்த நவரத்தினம், இப்போது தடைச் சட்டங்கள் நீக்கப்பட்டநிலையில், 'தனிநாடு' வீரராக பவனி வர முயற்சிக்கிறார்; ஆகா, அவரது வீரம்தான் என்னே!

பண்டிதரின் தொண்டும், தியாகமும், தமிழ் வீரமும் நாடறிந்த சங்கதி; அவர் காவலூரின் முடி சூடாமன்னனாக மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெறுவதை யாராலும் தடுக்கமுடியாது.

—ஈழதாசன்

---

— 6-ம் பக்கத் தொடர்

சாரினால் அநியாயமாகச் சுடப்பட்டு ஏழு உயிர்கள் அந்தப் புனித பள்ளிவாசலில் பலியாகின. புத்தளத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 271வீடுகள் 44 கடைகள் 2 தென்னந்தொழிற்சாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. 2 பள்ளி வாசல்கள் எரித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. 2 முஸ்லிம் வாலிபர்கள் சிங்களக் காடையரினால் உயிரோடு தீயிட்டுக் கொல்லப்பட்டனர். அதையொட்டியும் பகிரங்க விசாரணை நடத்த ஆட்சியாளர் விரும்பவில்லை. இந்நாட்டில் அடிமை மக்களாக வாழும் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் உயிருக்கும் உடமைக்கும் எவ்வித பாதுகாப்பும் அற்ற நிலையில் இருப்பதை இச்சம்பவங்கள் நிலைநாட்டுகின்றன.

### 10. புதிய அரசியல் அமைப்புத் தமிழ் தேசிய இனததின் மீது திணிப்பு

இந்நாட்டிற்கு ஓர் புதிய அரசியல் அமைப்பையாத்து அதைத் தமிழ் தேசிய இனத்தின் மீது திணித்த முறை இதுகாறும் கூறப்பட்ட எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது. குடியுரிமைச் சட்டங்களினால் சனத்தொகையில் 70 சதவீதமான சிங்கள மக்களுக்கு பாராளுமன்றத்தில் 80 சதவீதம் ஸ்தானங்கள் கிடைக்க வழி செய்ததன் மூலம் திரிபு பெற்ற சனநாயகத்தின் சின்னமாக விளங்கிய இலங்கைப் பாராளுமன்றம் 1970ம் ஆண்டு தேர்தலின் பின் அரசியல் நிர்ணய சபையாக அமைக்கப்பட்டது. 1971ம் ஆண்டு புகுத்தப்பட்ட அவசரகாலச் சட்டங்களின் கீழ் மக்களின் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், எல்லாம் பறிக்கப்பட்டு கண்டிப்பான பத்திரிகைத் தணிக்கையின் கீழ் அவ்வரசியல் நிர்ணய சபை தன் ஆலோசனைகளை நடத்தியது. அரசாங்கத்தின் பெரும்பான்மையும் சிங்கள வகுப்புவாதப் பெரும்பான்மையும் பூரணமாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் பேசும் மக்கள் சார்பில் அடிப்படைத் தீர்மானங்களுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் யாவும் சிங்களப் பெரும்பான்மையால் நிராகரிக்கப்பட்டன.

சுயாட்சிபெற்ற தமிழ் அரசையும், முஸ்லிம் அரசையும், மூன்று சிங்கள அரசுகளையும் உள்ளடக்கிய இணைப்பாட்சி அரசியல் அமைப்பின் மூலம் இந்நாட்டில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த திட்டம் ஆராயப்படாமலே நிராகரிக்கப்பட்டது. தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு எவ்வித மாற்றுத் திட்டத்தையும் கூறவோ ஆலோசிக்கவோ சிங்களப் பெரும்பான்மை உறுப்பினரில் எவருமோ எச் சிங்களக் கட்சியுமோ முன்வரவில்லை. தமிழ்மொழி உரிமைகளை யாவது அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யத் தமிழ் உறுப்பினர்கள் எடுத்த முயற்சிகள் விரயமாயின. தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்ட விதிகள் அரசியல் அமைப்பில் ஓர் அங்கமாகமாட்டா என்ற விதி 8 (2)ல் தெளிவாக மறுக்கப்பட்டதுதான் அவர்களுக்கு கிடைத்த பலன். இதனால் தமிழ் பிரதிநிதிகளில் மிகப் பெரும்பாலோர் அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேறினர்.

அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்ட 1972 மே 22ந் திகதி கூட்டத்தில் 19 பேர் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளில் 15 பேர் பகிஷ்கரித்தனர். ஆதரித்த நால்வரிலும் இருவர் தாம் தெரிவுசெய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசில் இருந்து வெளியேற்றப் பட்டுத்தம் பிரதிநிதித்துவத் தன்மையை இழந்தவர்கள், ஒருவர் இலங்கைத் தமிழரசுக்கட்சி மூலம் தெரிவுசெய்யப்பட்டு அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுத் தம் தகுதியை இழந்தவர். நாலாவது உறுப்பினர் அரசுக்கு மாறுக சுயேச்சை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டவர். எனவே இவ்வரசியல் அமைப்பு நூறு வீதம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டதென்பது தெளிவாகின்றது. தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த எதிர்ப்பை உதாசீனம் செய்து அவர்கள் மீது இப்புதிய அரசியல் அமைப்பைத் திணித்த வகையில் சிங்கள ஏகாதிபத்திய எசமானர்கள் தாம் அடிமைத் தமிழ் தேசிய இனத்தைத் தம் விருப்பப்படி ஆளுகின்றோம் என்பதை உறுதிப் படுத்தி விட்டனர். ஆங்கிலேயர் அளித்த அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்கு இருந்த சிறு பாதுகாப்புக்களையும் நீக்கி தமது மொழி, மதம் ஆகியவற்றை யாரும் தீண்ட முடியாத உயர் பீடத்தில் ஏற்றி ஆட்சியுரிமையில் எப்பங்கும் அற்ற அடிமைகளாக இக் குடியரசு அரசியல் அமைப்பின் மூலம் தமிழ் தேசிய இனத்தை ஆக்கிவிட்டனர்.

(அடுத்த வாரம் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாவியுங்கள்
அன்றும்
இன்றும்
என்றும்

மக்கள் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நீலம்

**ரோயல் நீலம்**

எமது மற்றும் பிரபல தயாரிப்புகள்

**ரோயல் ஜெலி கிறிஸ்டல்**
**ரோயல் கஸ்டட் பவுடர்**
**ரோயல் பேக்கிங் பவுடர்**
**ரோயல் கோன் பிளவர்**

தயாரித்து விற்பனை செய்பவர்கள்

**சிவா இண்டஸ்ட்ரிஸ்**

112 - 1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11

## இராணுவப் பயி...

—3-ம் பக்கத் தொடர்

வதில்லை அத்துடன் அப்பகுதியின் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராகவும் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்.

இவரின் பொதுப்பணியைப் பாராட்டி சமாதான நீதவான், சிவநெறிக்காவலன் ஆகிய பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய தொகுதிகளில் வேட்பாளர் தலைமைப் பீடத்தை நாடிச்சென்று தம்முள் முட்டிமோதுகையில் இவர்களுக்கு மாறுபட்ட முறையில் தலைமைப் பீடம் இவரை நாடிச் சென்று வற்புறுத்தி வேண்டியதன் விளைவாகவே இவர் வேட்பாளராக நிற்க முன் வந்துள்ளார். இவருக்கு தமிழ் இளைஞர் மத்தியில் நல்ல மதிப்புண்டு. தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவை இவரை முழுதாக ஆதரித்து தலைமைப்பீடத்திற்கு விதந்துரைத்துள்ளது.

இவரின் பணிக்குச் சிகரமாக விளங்குவது பறிபோகவிருந்த உகந்தை முருகன் கோவிலை இவர் காப்பாற்ற எடுத்துள்ள முயற்சியேயாகும். இவரின் முயற்சிக்கு மறைந்த திரு. மு. திருச்செல்வம், முஸ்லீம் ஐக்கிய முன்னணி உறுப்பினர் சம்சுதீன் ஆகியோர் துணைநின்றது இங்கு குறிப்பிடத்தக்கது. இவருடைய அரசியல் வாழ்வு இவருக்கும் தமிழ் மக்களுக்கும் பயனுடையதாக விளங்க தமிழ் முருகன் துணை நிற்பாளுக.

## கூட்டணியை எதிர்த்...

—5-ம் பக்கத் தொடர்

இனத்திற்கு என்ன செய்ய முடியுமோ அவற்றை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டில் நின்று செயல்பட முன்வந்துள்ளேன்'

## ஜெயக்கொடிக்கு பாராட்டு

நாவலர் அ. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக் குழு 16 தொகுதிகளுக்கான அபேட்சகர்களை நியமித்ததும், கொழும்பில் இருந்து நான் திரு. ஜெயக்கொடியுடன் தொடர்பு கொண்டு உடுப்பிட்டியில் சிறுபான்மைத் தமிழரொருவரை நிறுத்தலாமா எனக்கேட்டேன். ஒரு சில பிரச்சினைகள் எழக்கூடும். ஆனாலும் பரவாயில்லை என்று திரு. ஜெயக்கொடி தனது ஆதரவைத் தெரிவித்தார். இவரது இப் பெருந்தன்மையான குணத்தினால் தமிழினம் முழுவதற்குமே தலைமை தாங்கக்கூடிய தகைமையை திரு. ஜெயக்கொடி பெற்றுள்ளார். இதற்காக திரு. ஜெயக்கொடிக்கு பகிரங்கமாக நான் நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும்.

# செல்லமகால்

**எம். ஜி. ஆர். சரோஜாதேவி,**

**எம். ஆர். ராதா, பாலாஜி**

—நடித்த—

# என் கடமை

(புத்தம் புதிய கொப்பி)

9-வது வெற்றி வாரம்

# கெயிட்டி

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி,
வி. கே. ராமசாமி, உஷாநந்தினி, எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —

விஜயவேல் பிலிம்ஸாரின்

# மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

**நீகல்** (மட்டநகர்)
ரவிச்சந்திரன் சௌகார் ஜானகி நடித்த

## சொர்க்கத்தில் திருமணம்

# கிங்ஸ்லி

கடைசி வாரம்

ஏ. வி. எம். ராஜன், ஜெயா, சுகுமாரி,
நடித்த
சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன்,
நாகேஷ், பேபி சுமதி

# திருவருள்

(கலர்)

# பிளாசா

## அருணோதயம்

24-ம் திகதி முதல்

**காத்திருப்பேன் உனக்காக**

28-வது வெற்றி வாரம்

# கெப்பிட்டல்

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா,
சந்திரகலா நடித்த

## உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்நகர்) 3வது வாரம்

ரஞ்சன், அஞ்சலிதேவி நடித்த

# நீலமலைத் திருடன்

(புத்தம் புதிய கொப்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜூன் மாதம் 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.